**நவம்பர் – 19**

# TNPSC துளிகள்

- நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 55 சதவீதப் பங்களிப்பைக் கொண்டுள்ள திருப்பூர் ஜவுளித் தொழில் துறைக் குழுமம் ஆனது, இந்த நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில் (FY25) 13% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- இராஜஸ்தானில் 820 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் இந்தியாவின் முதல் பிரத்தியேக இரயில்வே சோதனை ஓட்டப் பாதையானது 2025 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டுக்கு வரும்.
- 43வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது புது டெல்லியில், "விக்சித் பாரத் @2047" என்ற கருத்துருவில் நடைபெற்று வருகிறது.
- கொச்சியில் உள்ள தெற்கு கடற்படைப் படைப் பிரிவில் நடைபெற்ற முப்படைத் தளபதிகளின் 35வது மாநாட்டிற்கு (TSTCC) பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஜெனரல் அனில் சௌகான் தலைமை தாங்கினார்.

# தேசியச் செய்திகள்

## பரவலாக்கப்பட்ட பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்பு




- பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கான முன்னோடித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 200 கோடி ரூபாய் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.
- இது குடியிருப்பு, வணிக, உள்ளூர்ச் சமூகம், பரவலாக்கப்பட்ட அல்லது வழக்கத்திற்கு மாறான பயன்பாடுகளில் பெரும் புதுமையான முறைகள் அல்லது வழிமுறைகளைப் பயன்படுத்தும்".
- இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் சூரிய சக்தி அடிப்படையிலான மிதக்கும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை, உயிரி பொருள் சார்ந்த பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை மற்றும் கழிவுநீரில் இருந்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை ஆகியவை அடங்கும்.
- பசுமை ஹைட்ரஜனின் பரவலாக்கப்பட்ட பயன்பாடு ஆனது சமையல், வெப்பமாக்கல், பொது மின் விநியோகக் கட்டமைப்பு சாராத மின்சார உற்பத்தி அல்லது சாலைப் பயன்பாடு சாராத வாகனங்களை இயக்குதல் ஆகியவை அடங்கும்.

## பயிற்சித் துறை விளம்பரங்களுக்கான புதிய வழிகாட்டுதல்கள்

- பயிற்சி நிறுவனங்களின் தவறான கோரல்களைக் கொண்டுள்ள விளம்பரங்களைத் தடுக்கும் நோக்கில் மத்திய அரசானது புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

- இந்த வழிகாட்டுதல்கள் ஆனவை, மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தினால் (CCPA) உருவாக்கப் பட்டுள்ளன.
- இது 'பயிற்சித் துறையில் தவறான கோரல்களைக் கொண்டுள்ள ஒரு விளம்பரத்தைத் தடுத்தல்' என்ற தலைப்பில் உள்ளது.
- கல்வி சார்ந்த ஆதரவு, கல்வி மற்றும் வழிகாட்டல் சேவைகள் தொடர்பான அனைத்து வகையான விளம்பரங்களுக்கும் அவை பொருந்தும் ஆனால் ஆலோசனை சேவை, விளையாட்டு மற்றும் கலை போன்ற துறைகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.
- இது குறிப்பாக "100 சதவீத தேர்ச்சி " அல்லது "100 சதவீத வேலைவாய்ப்புப் பாதுகாப்பு" போன்ற தவறான வாக்குறுதிகளை தடை செய்கிறது.
- இந்த விதிகளின் கீழ், பயிற்சி மையங்களுக்கு எழுத்துப்பூர்வ அனுமதியின்றி வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள், புகைப்படங்கள் அல்லது சான்றுகளைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.
- இந்த எழுத்துப்பூர்வ ஒப்புதல் ஆனது பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டப் பின் பெறப்பட வேண்டும்.





**ASSET இயங்குதளம்**




- "Green Transition in States" என்ற தலைப்பிலான ஒரு கருத்தரங்கம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.

- அதில் நிதி ஆயோக் அமைப்பு ஆனது, மின்சார அமைச்சகம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்துடன் இணைந்து ASSET என்ற இயங்குதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ASSET என்பது 'ஆற்றல் மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளைத் துரிதப்படுத்துதல்' என்பதாகும்.
- பசுமை மாற்றத்தை விரைவுபடுத்துவதில் மாநிலங்களுக்கு ஆதரவளிப்பதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த இயங்குதளமானது, மாநில ஆற்றல் மாற்றத்திற்கான சில செயல் திட்டங்களை உருவாக்குவதோடு, அதைச் செயல்படுத்துவதற்கும் உதவும்.

### ஆயுர்வேதம் ஆஹாரா - முன்னெடுப்பு





- ஆயுஷ் அமைச்சகம் ஆனது, ஆயுர்வேத ஆஹாரா என்ற வளர்ந்து வரும் துறைக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட ஆயுர்வேத அறிவியலில் மருந்து ஆராய்ச்சி இதழின் (JDRAS) சிறப்புப் பதிப்பை வெளியிட்டது.
- ஆயுஷ் துறை அமைச்சகம் ஆனது, 2022 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (ஆயுர்வேத ஆஹாரா) விதிமுறைகளை அறிமுகப்படுத்தியது.
- ஒழுங்குமுறை விதிகள் ஆனது, "ஆயுர்வேத ஆஹாரா" என்ப அதிகாரப்பூர்வ ஆயுர்வேத நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள சில ஆக்க முறைகள், உள்ளீட்டுப் பொருட்கள் அல்லது செயல்முறைகளின்படி தயாரிக்கப்பட்ட உணவு என வரையறுக்கப்பட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, ஆயுர்வேதம் அடிப்படையிலான உணவு முறைகளின் மூல அடையாளத்தையும் நம்பகத்தன்மையையும் நன்கு பாதுகாத்து, ஆயுர்வேத உணவுத் தயாரிப்பு முறைகளின் அடிப்படைகளைப் பாதுகாக்கிறது.

## சர்வதேசச் செய்திகள்

### முதல் பல்லுயிர்ப் பெருக்க மற்றும் இயற்கை சார் பத்திரம்

- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) ஆனது, அதன் முதல் பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் இயற்கை சார் பத்திரத்தினை வெளியிட்டுள்ளது.
- இது ஆசியா மற்றும் பசிபிக் முழுவதும் உள்ள தகுதியான திட்டங்களின் தொகுப்பிற்கு நிதியளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சுமார் 150 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர் மதிப்பிலான (100 மில்லியன் அமெரிக்க டாலருக்குச் சமம்), 10 ஆண்டு கால முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட பத்திரமானது ஜப்பானின் டாய்-இட்சி ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தினால் வாங்கப்பட்டது.
- ஆசிய மேம்பாட்டு வங்கியானது 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பவளப் பாறை முக்கோண முன்னெடுப்பின் ஒரு இணை ஸ்தாபன அமைப்பாகும்.
- 2023 ஆம் ஆண்டில், ADB ஆனது பங்குதாரர்களுடன் இணைந்து, இயற்கை சார் தீர்வு அமைப்புகளுக்கான நிதி வழங்கீட்டு மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் மையத்துடன் இணைந்து இயற்கை மூலதன நிதி ஆகியவற்றினை அறிமுகப்படுத்தியது.




## 8வது தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய துணைப் பிராந்திய மன்றம்




- இந்த மன்றத்தில் 'மிகவும் முறையான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றம் - 8வது நிலையான மேம்பாட்டு இலக்குகள்' என்ற அமர்வுக்கு இந்தியா தலைமை தாங்கியது.
- இந்த மன்றம் ஆனது நிதி ஆயோக் மற்றும் UN ESCAP ஆகியவற்றினால் இணைந்து நடத்தப் பட்டது.
- 2017-18 ஆம் ஆண்டில் 6% ஆக இருந்த இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 3.2% ஆக உள்ளது.
- அதே நேரத்தில் வேலைவாய்ப்பு விகிதம் ஆனது சுமார் 46.8 சதவீதத்திலிருந்து 56% ஆக உயர்ந்துள்ளது.
- e-Shram என்ற இணைய தளத்தில், அமைப்புசாராத துறையினைச் சார்ந்த சுமார் 300 மில்லியன் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

- இந்திய அரசானது 29 தொழிலாளர் சட்டங்களை நான்கு எளிமைப்படுத்தப்பட்ட சட்டத் தொகுப்புகளாக ஒருங்கிணைத்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## 2023 ஆம் ஆண்டில் ஏற்றுமதி கட்டுப்பாடுகள்

TABLE 3 DISTRIBUTIONAL CHALLENGES AND MECHANISMS TO ADDRESS SPATIAL AND TEMPORAL DIVIDES BETWEEN AGRIFOOD SYSTEMS ACTORS FOR TRANSFORMATION

| Potential stakeholders | Distributional challenges | Barriers to addressing challenges | Local versus global | Today versus tomorrow | Mechanisms today for a sustainable and inclusive tomorrow |
|---|---|---|---|---|---|
| Primary producers | ‣ Beneficiaries of hidden costs are spread throughout the value chain, but the burden of addressing hidden costs falls on producers | ‣ Asymmetric power relations<br>‣ Polluters are not beneficiaries of abatement<br>‣ Difficulty in assessing who bears the risk and uncertain cost of change | ‣ Environmental pollution with local impact versus global impact of GHG emissions<br>‣ Social hidden costs at primary production level versus cheaper products globally | ‣ Hidden costs linked to flows with immediate impact (e.g. water shortages downstream in the same season) versus those linked to stocks (e.g. GHGs in the atmosphere, groundwater depletion) | ‣ Collective action (e.g. cooperatives) can provide a greater say on sharing the burden of addressing social and environmental hidden costs<br>‣ Regulatory and financial frameworks to support the cost of transition<br>‣ Inclusive rural transformation to address social hidden costs |
| Food supply chain actors | ‣ Unfair arbitrage<br>‣ Concentration of power and downward price pressure on suppliers<br>‣ Intertemporal trade-offs | ‣ Difficulty in determining who should contribute along the value chain for a fair solution<br>‣ Vulnerable groups lack access to decision-making processes<br>‣ Addressing hidden costs of tomorrow affects competitiveness of today | ‣ Social hidden costs along value chains are more visible at local than global level<br>‣ Potential to externalize costs through imports | ‣ Value chain actors tend to maximize profits in the short term, but also manage future risks<br>‣ Shorter time horizons than needed | ‣ Voluntary standards<br>‣ ESG reporting<br>‣ Compliance with laws and regulations<br>‣ Labelling and certification<br>‣ Industry-wide coalitions to address hidden costs |

- ஏற்றுமதி தடைகள், வரிகள் அல்லது பிற கொள்கைகள் காரணமாக இந்திய விவசாயிகள் மீது மறைமுகமாக 2023 ஆம் ஆண்டில் 120 பில்லியன் டாலர் வரி விதிக்கப்பட்டுள்ளது. இது 54 நாடுகளில் விதிக்கப்பட்ட மிக அதிகபட்ச வரி விதிப்பாகும்.
- பகுப்பாய்வு செய்யப்பட்ட இந்த 54 நாடுகளில், இந்தியாவில் விவசாயிகளுக்கான நிகர ஆதரவு கடந்த இருபது ஆண்டுகளாக எதிர்மறையாக இருந்தது ஆனால் குறிப்பிடத் தக்க அளவில் ஏற்ற இறக்கங்களை கண்டுள்ளது.
- இதில் நிதிநிலை ஒதுக்கீட்டுப் பரிமாற்றங்கள் மற்றும் மானியங்கள் என்பது சுமார் 10 பில்லியன் டாலர் அளவுக்கு இருந்தது.
- ஒட்டு மொத்தமாக, இது 110 பில்லியன் டாலர் மதிப்பிலான எதிர்மறையான (சர்வதேச விலைக்கு ஏற்ப ஈடு செய்யப்பட்ட விலையை விட குறைவான விலை) மொத்த சந்தை விலை ஆதரவு வழங்கீட்டிற்கு வழிவகுத்தது.
- வியட்நாம் மற்றும் அர்ஜென்டினாவைத் தொடர்ந்து இந்தியா அதிக எதிர்மறை விலை ஆதரவைக் கொண்டிருந்தது.
- இந்தியாவின் எதிர்மறை ஆதரவு ஆனது 2023 ஆம் ஆண்டில் உலகளவில் நிலவி உள்ள அனைத்து வரிகளிலும் 62.5 சதவீதமாக இருந்தது.

## அமைப்பு ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள்


- பாரத் ஸ்டேட் வங்கி (SBI), HDFC வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவை அமைப்பு ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக (SIB) இந்திய ரிசர்வ வங்கியினால் வகைப் படுத்தப் பட்டுள்ளன.
- SBI மற்றும் HDFC ஆகிய வங்கிகள், 2025 அம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் கூடுதல் மூலதனக் காப்பு நிதியினைப் பேண வேண்டும்.

- அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் ஆனது, அவற்றின் அளவு மற்றும் வேறு சில அளவுருக்களின் காரணமாக வீழ்ச்சியடைய முடியாத அளவுக்கு மிகவும் பெரியதாகக் கருதப்படுகின்றன.
- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் முறையே SBI மற்றும் ICICI வங்கிகளை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சில வங்கிகளாக (D-SIBs) வகைப்படுத்தியது.
- 2017 ஆம் ஆண்டில், HDFC வங்கியும் D-SIB ஆக வகைப்படுத்தப்பட்டது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## மேல்தோல் அழுகும் நச்சு நோய்க்கான சிகிச்சை





- ஆராய்ச்சியாளர்களின் குழுவானது ஒத்துழைப்பு மூலம் TEN நோய்க்கான ஒரு புதிய சிகிச்சை அணுகுமுறையைக் கண்டறிந்தது.
- மேல்தோல் அழுகும் நச்சு நோய் (TEN) என்பது பொதுவான மருந்துகள் அல்லது சில நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு வெளிப்படும் அரிதான ஆனால் மிகவும் கடுமையான பாதகமான எதிர்விளைவாகும்.
- இது தோலில் பெரும் பரவலான கொப்புளங்கள் மற்றும் தோல் உரிதல் நிலையை ஏற்படுத்துகிறது.

- சுமார் 30 சதவிகிதம் வரை உயிரிழப்பு விகிதத்துடன், இது ஒரு வெளித் தோற்றத்தில் பாதிப்பில்லாத சொறியாக ஏற்பட்டு, உயிருக்கு ஒரு ஆபத்தான நிலையாக விரைவில் மாறுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நுண் நெகிழிகள் மற்றும் வானிலை மற்றும் பருவநிலை வடிவங்கள்




- நுண் நெகிழிகள் ஆனது மேகங்களில் பனிப் படிகங்களை உருவாக்க உதவுகின்ற பனி ஈர்ப்புத் துகள்களாகவும், நுண்ணிய தூசிப் படலங்களாகவும் செயல்படுகின்றன.
- மேகங்களில் காணப்படும் நுண் நெகிழிகள் பெரும் வெப்பமான வெப்பநிலையிலும் உறைந்து விடும்.
- நுண் நெகிழிகள் காணப்படுவது போன்ற மேக குறைபாடுகள் போன்றவை மேகங்கள் உருவாகும் அடிப்படைத் தன்மையை மாற்றி மழைப்பொழிவில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.
- இது இடியுடன் கூடிய மழைப் பொழிவு முதல் உலகளாவிய வெப்பநிலை மாற்றம் வரை அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.
- அதாவது, நுண் நெகிழிகள் மழைப்பொழிவுகள், வானிலை முன்னறிவிப்பு, பருவநிலை மாதிரியாக்கம் மற்றும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## கடல் யானைகளில் H5N1 பாதிப்பு

- H5N1 வகை பறவைக் காய்ச்சலானது ஓராண்டில் சுமார் 17,000 கடல் யானைகள் உயிரிழப்பிற்கு வழிவகுத்தது.
- இது 2023 ஆம் ஆண்டில் 95 சதவீத கடல் யானைக் குட்டிகளை அழித்து விட்டது.
- இந்த வைரஸ் ஆனது 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பெரு மற்றும் சிலி நாட்டுக் கடற்கரைகளில் பரவியது.
- இது கடற்பன்றி, ஓங்கில்கள் மற்றும் பிற கடல் வாழ் பாலூட்டிகளால் பரவுகிறது.


- இந்தத் தொற்று ஆனது, குறிப்பாக அர்ஜென்டினா நாட்டின் படகோனியாவில் இனப் பெருக்கம் செய்யும் உயிரினங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.
- H5N1 என்பது பறவைகள் மற்றும் பாலூட்டிகளைப் பாதிக்கும் ஒரு மிகக் கடுமையான வைரஸ் தொற்று ஆகும்.



# முக்கிய தினங்கள்

## குருநானக் ஜெயந்தி - நவம்பர் 15

- இந்த நாளானது முதல் சீக்கியக் குருவான குரு நானக் அவர்களின் பிறந்த நாளினைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டு குருநானக் அவர்களின் 555வது பிறந்தநாள் ஆகும்.
- அவர் 1469 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று, தற்போதையப் பாகிஸ்தானின் லாகூர் அருகே உள்ள ராய் போய் கி தல்வாண்டியில் பிறந்தார்.
- குருநானக் 15 ஆம் நூற்றாண்டில் சீக்கிய மதத்தை நிறுவிய ஒரு ஆன்மீக தலைவராகக் கருதப் படுகிறார்.
- குரு கிரந்த் சாஹிப் நூலினை எழுதத் தொடங்கிய அவர் 974 கீர்த்தனைகளை நிறைவு செய்தார்.




## பன்னாட்டு அளவில் ஒழுங்கமைக்கப்பட்டக் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச தினம் - நவம்பர் 15

- இந்த ஆண்டு ஆனது இந்த சர்வதேசத் தினம் முதன்முதலில் அனுசரிக்கப்படுவதைக் குறிக்கிறது.

- அனைத்து வகையான பன்னாட்டு ஒழுங்கமைக்கப்பட்டக் குற்றங்களாலும் ஏற்படும் அச்சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதையும் ஒரு சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமைதி, உலகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தைக் குறை மதிப்பிற்கு பெருமளவு உட்படுத்தும் ஒழுங்கமைக்கப்பட்டக் குற்றங்களின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர் கொள்வதற்கு உலகளாவிய ஒற்றுமையின் ஒரு அவசரத் தேவையை இந்த நாள் எடுத்துக் காட்டுகிறது.
- பன்னாட்டு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை ஆனது, 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "It's time we pull together to push back" என்பதாகும்.




## இதரச் செய்திகள்

### பெரு நிறுவன சமூகப் பொறுப்புகள் (CSR) அறிமுகத்தின் 10 ஆண்டு நிறைவு




- பத்தாண்டுகளுக்கு முன்பு, பெரு நிறுவன சமூகப் பொறுப்பினை (CSR) சட்டப்பூர்வமாக கட்டாயப்படுத்திய முதல் நாடாக இந்தியா மாறியது.
- 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 135 பிரிவு ஆனது, CSR பொறுப்புகளை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கொண்டுள்ளது.
- தேசிய CSR இணைய தளத்தின் படி, 2014 முதல் 2023 ஆம் ஆண்டு வரை, 1.84 லட்சம் கோடி CSR நிதி வழங்கப்பட்டுள்ளது.
- CSR என்பது பெருநிறுவனங்களானது சமூகம், பொருளாதாரம், மற்றும் சுற்றுச்சூழல் பங்களிப்புகள் மூலம் சமூகத்தின் நலனுக்காக நேரடியாகப் பங்களிப்பதற்கான ஒரு வழி முறையாகும்.

- அட்டவணை VII (பிரிவு 13) என்பது, நிறுவனங்கள் ஆனது தங்கள் பெரு நிறுவன சமூகப் பொறுப்புக் கொள்கைகளில் மேற்கொள்ளக் கூடிய பல நிறுவனச் செயல்பாடுகளைக் குறிப்பிடுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★